128

உ

கடவுள் துணை.

விரலிவிடு தூது.

(*)

இஃது

மணிமங்கலம்

வடிவேலு முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதுரை-புதுமண்டபம் புத்தகஷாப்.

பி. நா. சி. கடைகாரியம்,

மு. கிருஷ்ணப் பிள்ளையவர்களால்

பிடாரித்தாங்கல்.

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை,

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது நெம்பர் வீடு.


வெய்யற்காலத்தில் உபயோகிக்கக்கூடிய

மூக்குக்கண்ணாடிகள்.

நெ. 1.



நெ. 2.



இக்கண்ணாடிகள் கண்களுக்கு அதிகபிரயோசனம் தரத்தக்கவை கப்பல்யாத்திரை செய்பவர்களுக்கும், ரயில்வண்டியில் பிரயாணஞ்செய்பவர்களுக்கும், மிக்க உபயோகமுள்ளது. புகைவண்டியில்பிரயாணஞ்செய்யுங்காலையில் கண்களில் தூசு, புகைக்கரித்துண்டுகள் கண்களில்படாமல் தடுக்கக்கூடியது. பகற்காலங்களில் வழிநடப்போருக்கு வெய்யலின் உபத்திரவம் தெரியாமலிருப்பதுந் தவிர ரோட்டுகளில், காற்றுவீசுவதினால் கிளம்பும் மண்தூசுகள் கண்களில்படாமல் கண்களைக்காக்கும் கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும் சிறுவர்முதல் பெரியோர்வரையில் உபயோகிக்கலாம் யாதும் கெடுதியை யுண்டாக்காது (கவனிப்பு) இதுகடைகளில்விற்கும் 1-அணா இரண்டணாவிலையுள்ள கண்ணாடிகளல்ல, உயர்ந்தகண்ணாடிகள் பச்சை, ஊதா, மேகவர்ணமுதலிய கண்ணாடிகள் எம்மிடம் உண்டு.

முதல்தரம் ரூபா 2 0 0 இரண்டாந்தரம் ரூபா 1 8 0

மேற்குறித்த கண்ணாடிகள் தேவையுள்ளவர்கள் முதல்தரம் இரண்டாந்தரம் என்று கண்டெழுதினால் அனுப்பப்படும். இதில் கண்ட இரண்டுகண்ணாடிகளில் எதைவாங்கினபோதிலும் ஒரேவிலைதான் முதல் தரமென்பது உயர்ந்தது இரண்டாந்தரமென்பதுமட்டம்.

எம்முடைய கேட்லாக்வேண்டுமானால் அரையணாஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

மேற்கண்ட சாமான் தேவையானவர்கள் எம்முடைய விலாசத்திற்கு எழுதினால் வி-பி-யில் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர்போஸ்டு மதராஸ்.

உ

கணபதிதுணை.

விறலிவிடு தூது.

காப்பு.

பொங்குபெருஞ்செல்வப் புகழ்பெரியநாயகன்பேர்
துங்கன்விறலிவிடு தூதுக்கு-மங்களஞ்சேர்
பஞ்சவருக்கங்களைமுற்!பைம்பொனெடுங்குன்றிடுகைக்
கஞ்சமலர்க்குஞ்சரமே காப்பு

விறலி புகழ்ச்சி.

கார்பூத்தமேனிக் கருணைத்திருநெடுமால்
பார்பூத்தவுந்தி பரனதாமன்-நீர்பூத்த
வேலைக்குமுற்கடந்த வேலைவருத்தெள்ளமுதும்
ஆலைசருவெண்சா றடுபாகும்-பாலும்
கனியுஞ்சருக்கரையுங் கற்கண்டுநாவுக்
கினியபசுந்தேனு மிணங்கத்-தனியாக
மத்தித்தெடுத்த மதுரத்துக்கெண்மடங்க
தித்திப்புக்கேட்போர் செவிக்கேயத்-தத்தைகள்போய்க்
குன்றேறத்தோத்துக் குயின்மாமரந்தோறுஞ்
சென்றேறவாணி சிறுகுயரி-நின்றொருதிங்கி
விண்ணேறவந்தரத்தில் விஞ்சயரேறத்தளிந்து
பண்ணேரப்பாடுமிசைப் பாடினையே-உண்மையருள்
போதிக்குமெய்த்தவத்தோர் புத்திக்கிடையூறு
நாதிக்குமேழிசைக்கு நாயகமே-தீதக்
கொழுந்தோடிமன்னவராங் குன்றிற்படரக்
கொழுந்தோடிபாடிவருங் கொம்பே-எறுஞ்சிமிழ்
கண்டாரகத்திலொரு காமப்பேயேற்றுதற்குங்
கண்டாரகத்தில்வல்ல காரியே-கொண்டைநெடுங்
கண்சுருட்டியோகர் கருத்தறிவெல்லாஞ்சுருட்டி
பண்சுருட்டியாடுமுயிர் பாவையே-ஒண்கிரணக்
காந்தாரங்கொங்கையின்மேற் கைத்தம்புருவணைத்துக்
காந்தாரமேற்றுங் கனிமொழியே-சேந்தவரி
யம்பகாம்போதி வணங்குமணங்குமிசை
கும்பகாம்போதிரச கும்பமே-தும்புருதன்
பாகஞ்சித்தனியாள் பட்டுறையினுட்டையர
மேகரஞ்சிபாடும் விறலியே-வாகத்திற்
காகவறிவின்றிக் கலந்தனில்வைத்துண்பாரைத்
தேகியென்பார்க்கியத் தியாரை-ராகமெனனும்

கள்ளக்கயிறுகொண்டு கட்டியுருட்டிவிழித்
துள்ளுமுனைச்சாட்டைகொடு சுண்டியே-தெள்ளமிர்தத்
திக்குதலைச்சொல்லாமற் றிகிலேற்றித்தேட்டையெல்லாம்
வாங்கிவிடவல்லமை தங்கியே-நீங்கிவெறும்
பாணமடவார்க்கு மாடவற்குநல்வசமா
தானந்தானவா தானியே-கானவித்தை
பாட்டையெல்லாங்கற்ற பனிமொழியேநான்பட்ட
பாட்டையெல்லாஞ்சற்றே பகரக்கேள்-வேட்டமனை

அவதானி தன்சம்பவந் தொகுத்துரைத்தல்,

யாட்டியுடன்போட்டிவினோங் தாட்டிவிட்டபம்பரம்போல்
நாட்டையெல்லாஞ்சுற்றிபது நானுறுநாள்-தோட்டிதழிப்
பூவுடையான்றென்மதுரைப் புக்கதுவுமங்கேயோ
தேவடியாள்கைக்குள்ளாய்ச் சிக்கியதும்-பாவிகிழ
வோரியென்கைப்பொன்னை யுருஞ்சியதும்போல்வாய்த்துச்
சாரிசதிசெய்ததுவும் வைததுவு -போராடி
மேரைகிடவம்பலத்தில் விட்டதுவும்வாப்புகட்டால்
ஊரைவிடப்பற்றியென்னை யோட்டியதும்-பேராசை
அங்கேயிருக்குமன தாகிவழிகொண்டுபுகல்
எங்கேயென்றென்பதூர்க் கேகியதும்-சங்கேந்தும்
திம்மாராயப்பெருமாள் செஞ்சரணசேகரனை
மும்மதமால்யானை மூர்த்தன்னியனை-ரம்ய
கருணாகரனைக் கனயோகவானைப்
பொருநாவலர் பூஷணனை-குருநிதியைச்
சந்த்ரமுகமந்த்ர களத்ரகொலுவிந்த்ரனைச்
சிந்தமனுமார செய்தரனை-முந்து
நிலைகேட்டைவானை நெடுங்கலியைத்தூரத்
துலைக்கேட்டுந்தயா துரையே-மலைகோட்டில்
ஆனைவைத்துப்பார்க்கு மறுபத்துநாலுமன்னர்
பானையத்தைவென்ற படையானை-வாளரசர்
வெஞ்சமருக்கஞ்சா விருதுவென்றிவாகனைநம்
பெஞ்சநகர்காக்கும் பெருமானை-வஞ்சகர்க்கோர்
தண்டப்பெரும்புலியைச் சாமித்துரோகரைக்காய்
வெண்டயத்தார்சூரியனை வீரியனை-மண்டலிகர்
மாகனகங்கப்பமிடும் வாயிலானைபெரிய
நாகமகளேந்திர நராதிபனை-போகனையான்
பாடிபதுமையன்முகம் பார்த்ததுவுமென்கலிவள்
யோடியதும்பாக்கியம்வந் துற்றதுவும்-நாடியிங்கே
நான்வந்ததுவு நமெத்திபிலேயிரண்டு
மான்வந்தனையவிழி மாதேகேள்-தான்பான

திக்கெல்லாங்கொண்டாடுஞ் செங்கோல்விசையரங்க
சொக்கநாகேந்த்ர துரைராசன்-சக்ரபதி
சேதுபதிபாண்டியகுலதெக்ஷிணசிங்காசன
நராதிபதியெச்சு நாபாலன்-கோதில்
உருப்பான்மைவெண்புறைமே லூர்வதுதன்கோல
மருப்பாகும்பன்றி மலையான-திண்க்கரத்தில்
ஆரமணியாரமணி யாரமணிவாரிநடு
வாரியிலெங்குடவ மானதியான-தார்வேந்தர்
வீதிக்குவீதி விவாகமணிமுரசம்
நாதிக்குபாண்டியவள நாட்டினன்-ஆதித்தன்
தேருநாணசெய கேபுரிநிலக்குள
ஊருமெனுமுன்மொன்ப தூரினன்-கூரியபேர்
வேலைதைக்குஞ்சேங்கருங்கண் மினனரிதயமண்டு
மாலைவைக்குபூந்தளவ மாலையான்-கோல சய
முகவிலங்குபணியணிந்து முதுகணைந்தகலைகொண்டு
தகைதவிந்துகடைவந்து சமராடர்ந்துபகைவர் தங்கள்
தலையினின்றுதிமிதிகிந்தி தகுதிதந்தியெனநடஞ்செய்
துலவிவந்தகனகதண்டை யொலிமிகுந்து-ககைமெலன்று
கொஞ்சிடச்சதங்கையிட்ட கொண்டலொத்திருந்திறதத
வெஞ்சினப்பிரசண்டவுக்கிர வெண்பரியான் விஞ்சுகரம்
ஒன்றுபடைத்துவரு மோங்கலுக்கொப்பாயிரண்டு
வென்றிப்புறைசுமந்த மேகமனத்-துன்று
மதங்களொனுமூன்று மாரிசிந்தப்பாகர்
ஓதுங்கநால்வாயா லுதரி-நதிர்ந்துபொரும்
அஞ்சாருதிரத்தை யாராக்கியோரேழு
மஞ்சார்புனலை மடுத்துறுஞ்சிக்-குஞ்சரங்க
ணைம்பகோரெட்டு மிணையிலலையென்றசுற்றி
ஒன்பதூர்வீதி யுலாவியே-வம்புரைப்போர்
பைம்பொன்முடியிடறிப் பத்துநகமுந்தேய்ந்து
கும்பரணகம்பீர குஞ்சரத்தான்-அம்புவியில்
காந்துகலியைவெட்டுங் கண்டகோடாரியைப்போல்
ஏந்துவெள்ளைப்பககரையி டாலினன்-சாய்ந்தோடிக்
குன்றிக்கருதாற் குடும்பங்குடியேற
முன்றிக்குமுறுபணி மும்மரசாண-னின்றவடி
தூக்கினார்தென்னி துடிக்கததுளைத்துவிடும்
ஆக்கினைசக்கரம்போ லாணையான-பாக்கியவான்
கற்பகமாம்பட்டரையுங் காய்கருணையேமணக்கும்
பொற்கமலம்போன்றமனப் பூரணவான்-பற்றலார்

தண்டார்மருடக் கடவுஞ்செயவீர
கண்டாமணிமுழங்குங் காலினன்-மண்டுசமர்
யுத்தகளதலெதனை ருயிர்பேய்க்குற்றுடைவான்
கைத்தனைத்துக்கட்டுமருங் காலினனை-கைத்தலத்தில்
ஐந்தருவுமைந்துவிர லாக்கித்தருவவெனச்
செந்தமிழ்க்குநல்குமலர்ச் செங்கையான்-பைந்தொடியார்
பொன்முலையாங் காட்டிற் புதுக்கலவைச்சேறாட்டி
மன்மதநாலெழுது மார்பினூ நன்கைதரும்
வெற்றிச்சிறுபெண் விளையாடும்சிற்றிலெனச்
சுற்றிபசேயூரமணித் தோளினனை-கற்றவராங்
கோக்குலதவைக்காத்தருளுங் கோபாலர்வேயிசைபோல்
வாக்குமதுரம்பொழியும் வாயினன்-நாக்குளிரச்
சொல்லிரசங்க டுவர்ப்பெனறுதள்ளியின்பக்
கல்விரசம்பருகுங் காதினன்-வல்ல
மருவலவைவெட்டுகின்ற வாள்போன்முகத்திற்
கருணையுலவுமனக் கண்ணன்-இரவினுடல்
சாய்ததமதிமுகத்துத் தையலார்முத்தமிட
மாய்த்கமுழுமதிபோன் மாமுகத்தான்-காத்தருளும்
எம்பிரான்கோயி லேசரடியெங்காளும்
செம்பொன்முடி தாங்குமலர்ச் சென்னியான்-உம்பர்தொழும்
நின்மலனார்வெண்ணீற்று நெற்றிக்கண்காணாத
மன்மதன்காணென்னு மவடிவினு-னென்னுடைய
வல்லக்கவார்குலத்தில வாள்வேந்தர்கண்குளிரப்
பல்லக்குமேலுலவும் பாக்கியவான்-வில்லேற்றிக்
கைக்கொண்டுபொற்படியின் கால்கொண்டுபஞ்சகதி
மெய்க்கொண்டனையபரி மேற்கொண்டு-செய்யகனை
துங்கதளகர்த்தர் துரைமக்கள்வாள்பிடித்துச்
சிங்கமெனச்சுற்றி திரண்டுவர-மங்குளெனக்
கூனன்முதுகொடடகமேற் கொட்டுகின்றடம்மாரம்
யானையின்மேற்பேரி யதிர்ந்துவரச் சேனையொடு
தாக்குற்றுமண்டலிகர் தங்களுக்குச்சென்றுசொல்லுங்
கூக்குரல்போல்வீரசின்னங் கொம்பூத-நோக்கும்
பரிதிபகைக்குப் பகையெழுந்ததென்ன
கருவிருதுடால்வட்டம் வீசத்-தரளக்கால்
வெள்ளாக்கொடியாடை மேகங்கிழித்துவரப்
பிள்ளைப்பிறைபோற் ப்ரகாசிக்க-வெள்ளைவெட்டச்
சித்ரக்குடைகள் செயமாதுகிட்டநீழன்
முத்துமணிப்பந்தரென மொய்த்துவரக்-கைத்தலத்திற்
கத்துபிடித்துவெள்ளி கட்டினதுபாக்கிகொண்டு
பத்துலட்சங்காலாட் படைநடக்கத்-தத்துபரி
சொக்குநரையான் ஸைக்குமரிபெனராவுத்தர்

கைக்குளடங்காது கான்பிற-நெய்க்கவலம்
கூட்டியிரைபூட்டியிரு கொம்புகற்றிபூட் டிமதம்
மூட்டிவிட்டமால்யானை முன்னடக்க-கூட்டமிட்டு
வாரிட்டணிவகுத்து வா திற்றவேற்றரசர்
போரிட்டவெங்களத்திற் போயெதிர்த்து-நேரார்மேற்
கட்டபிரங்கத்தித் தொளியுமபகையருஞ்கு
விட்டமுகிலு மடியுமெனப்-பட்டாங்கள்
வீசுவதுவேட்டுவது மின்னலென்வீரர்சிலை
பூசலம்புமாரிமழை போர்பொழியத்-தேசப்
பரதளங்கள்பட்டருள பாய்ந்தபெருஞ்செந்நீர்ப்
பிரளாய்ப்பிரவாகம் பெருகச்சிரதலத்தில்
ஆனையிருப்புலக்கை யானையடிக்கவிழு
மூளைநுரைத்திரளாய் மொய்த்தோட-வாளாற்
படுந்தீரரேறிவரும் பல்லக்குப்பேய்க்கு
விடுந்தோணிபோலு மிதம்பக்-கிடந்துசிலர்
வேர்த்துப்பரிசைகொண்டு மேன்முடிசென்னியொட்டிப்
பார்த்துக்கபடமெனப் பதுங்கப்-போர்த்தலையில்
மந்திரவாள்வேந்தர் மகுடத்துதிர்ந்தரத்னம்
இந்திரகோபங்க ளெச்சிதறச்-செந்தருண்கண்
விந்தைதமிடிதீர வெற்றிப்பயிரேற்றி
வந்துகொலுவிருக்கும் வாள்வீரன்-முந்துபெரும்
பாதலத்தில்சிவரேறுடிப் பாரிற்படர்ந்துவட
பூதரத்திலேறும் புகழினன்-நீதிபரன்
சிந்தம்கூளேந்த்ரதுரை சிங்காசனாதிபதி
தந்தசௌபாற்பய சம்பன்னன்-செந்துவர்வாய்க்
காமவடிவேல்விழியார் கைவலிவெல்லாமெழுதும்
நாமவடிவேற்பெரிய நாகேந்த்ரன்-சேபநிதி
பூராதிபன்வாழ்வை யொக்குநவகோடி
நாராயணன்பெரிய நாகேந்த்ரன்-போலாம்
ஆட்டுக்கூட்டங்களிலோ ராண்புலிபோற்பாயநடு
நாட்டுக்கூழிற்பெரிய நாகேந்த்ரன்-பூட்டுசிலை
அம்பொன்றுளீவே னரசுனக்குவீடாணு
நம்பொன்றமால்பெரிய நாகேந்த்ரன்-ஸ்தம்பமென
லோகஞ்சுமப்பதினு லோராவிரமௌலி
நாகம்பொரும்பெரிய நாகேந்த்ரன்-பாகனுஞ்சொற்
பாவுக்கேறிக்கனகப் பல்லக்கேறிப்புலவோர்
நாவுக்கேறும்பெரிய நாகேந்த்ரன்-வாவிசுகழ்
பெஞ்சநமர்வாழப் பெருஞ்சீர்வளர்ந்தோங்கக்
கஞ்சமலாமாதுகளிகூற-வஞ்சகமும்
பொய்யும்பரந்தோடப் புண்ணியமுந்தண்ணளியும்
மெய்யுங்கலந்து விளையாடப்-பெய்யுமழை

வானம்வழங்க மனைவாழ்க்கைபோங்கமன்னன்
தானம்வழங்கச் சவமோங்க-நான்மறைக்கும்
நன்னிதியாமேகவண்ண நாகர்திம்மராமந்திரு
சன்னிதியிற்பூசை தழைத்தோங்க-அன்னிலத்தின்
எங்கோனபிஷேக மோகது னுவிக்கியனச்
செங்கோலரசு செலுத்துநாள்-நங்கேகதம்

அவதானிகள் பிரப்பாதி சொல்லல்.

காரங்கமேனிக் கடவுளிருக்குமந்தச்
சீரங்கத்தேபிறந்தேன் செல்வத்தில்-ஈரைந்தோ
டாறுவயதினுக்கு ளாரிமுமவேதமுநா
வேறித்தமிழ்நா லிலக்கணத்தின-மீறினேன்
வாலசரஸ்வதியென் வாக்கிற்ப்ரசன்னமதா
நாலுகவித்திரமு நானறிந்து-மேலும்
மயிலுமெனசொன்னவுரை மாறுமற்சொல்லக்
கபிலாடசிங்கே கழட்ட-அயலொருவன
சொன்னவினைச்சொலல லெதிர்கூடப்பின்முதகு
தன்னிலெறிந்தகல்லுக் காணெண்ணப்-பண்ணுசது
ரங்கவிளையாட்டுக் கடி ர்க்கச்சொற்புலவோர்
தங்களகவியையவ தானிக்கச்-சங் த்தில்
எட்டெழுத்தரணிக் கேற்றவலிசொலலவும்யான்
அஷ்டாவதானியெனத் தாபினேன்-மட்டார்
திருப்பதியிலேவாசு தேவஞ்சுதகளை
வருப்பிருவவின்பக் கனியை-விருப்பமுள்ள
பூங்காவனத்தைப் பொருத்தமுடனவேட்டுப்
பாங்கானவாழ்விற் பயிலுநாள்-ஆங்குசெல்வந்
தீசர்திருச்சன்னிதியி லேந்திழையார்தம்மிலொரு
தாசிமேல்வைத்தேன் றயாநான-நேசமாய்
இந்தாங்கத்தெதிரிருந்தே னின்பசவல்லியிடத்
தங்கரங்கத்தேனிருந்தா னசை ால்-அந்தத்
திருச்சிராபள்ளிக்குச் செலலாதிருக்கத்
தரிச்சிராதென்மனது தானும்-ஒருத்தன்
அறியாச்சிறுவனுடன் யானொருநாளந்த
வெறியாற்குழற்பரத்தை வீட்டிற்-பிரியமுடன்
சென்றிருந்துவந்தேன் திடத்திடனவோட்டிப்போய்
குன்றிருந்தகொங்கைக் குலமனையாள்-தன்கணவர்
ஓடகத்திலேறிருக்கரியம்போக்கடித்தார்
நாடிச்சிரகிரியை நண்ணினற்-கூடவந்த
என்னைச்சவுக்கையில்வைத் தினபரசவல்லிவென்
பொன்னையாள்வீட்டுக்குப் போய்புகுந்தார் அந்நேரம்
மிஞ்சிமிஞ்சி பேசினன் வேசிமகளதற்குள்
அஞ்சிஅஞ்சிபேசினு ரையங்கார்-வஞ்சியந்த

வீட்டுக்கதவடைத்தான் மெள்ளமெள்ளகெஞ்சினான்
காட்டுப்புறவோசை காட்டினான்-வீட்டைவிட்டு
வந்தார்நமமையரென்னை வாவென்றார்காவிரியிற்
சந்திபண்ணிக்கரையிற் றண்டினார்-இந்தவூரக்
கென்மார்க்கஞ்செல்லாதே யென்றுசொன்னாரன்றந்தத்
தின்மார்க்கமையரெல்லாஞ் சொல்லிவிட்டார்-மர்மம்
தொடுத்தாள்சடுத்தாள் தூங்குமஞ்சம்விட்டுப்
படுத்தாள்பகைஞரைப்போற் பார்த்தாள்-அடுத்தடுத்து
வேண்டினேன்குட்டி வெளிபாக்குவேனென்னைத்
தீண்டாதேயென்றாள் சிராப்பளியில்-ஆண்டவன்பாற்
செல்லாயென்றாள்பரத்தை தேடுவாளேயென்றாள்
செல்லாதவார்த்தைசில சொல்லினாள்-இல்லாள்
வலியகிந்தமாற்ற முரைக்குமேலவ்வில்
புலிகிடந்ததூராய் விடுமென்-றுலகரியச்

(யாத்திரைசெய்தமைகூறல்.)

செப்பினாளவ்வையென்று தேர்ந்தேனிராத்திரியே
தப்பினேன்கைத்தகங்கத் தக்கதுகொண்டப்பால்
அதிசயங்களானதலம் யாவுமறிவோம்
நதிகள்பலமூழ்குவோ நாமென்றிதயமாய்
வெள்ளைநாவற்பழிக்கு மிக்கப்பதியும்நரிகள்
துள்ளுபரியானதொரு தொன்னகரும்-தெள்ளுமிதன்
செப்பக்கதவுநீ திறந்தவூருங்கருங்கல்
கப்பலெனவந்தகடற்பதயம்-இப்புறத்தில்
பாங்குடையவண்டு பனிரெண்டுக்கோர்தான்பா
மாங்கனீர்பொங்கு வளப்பதியும்-பூங்குடத்தில்
அங்கத்தைமங்கவடி வாக்கினவூருந்தமிழ்க்குத்
தங்கத்தையீந்த தளியூரும்-செங்கருங்கட்
காகமெரியக் கனல்வீசுமாமலையும்
யோகங்கழுகுசெயு மெண்கிரியும்-வேகமிந்த
காண்டாண்டுவெம்முதலை கௌவியுண்டபிள்ளைதனை
மூன்றாண்டுசென்றழைத்த மூதூரும்-மான்றானோர்
தாசிக்கெழுந்த தனத்தைலிங்கமென்றொருவன்
பூசித்துபேறுபெற்ற பொன்னகரும்-நேசித்து
மைந்தனுடவரிந்து மாதவத்தோர்கிட்டுவினைப்
பந்தமரிந்தோர் பழல்பதியும்-சொந்தமாம்
ஆட்டைப்புலிகாக்கு மம்பலமுநாலுவசி
காட்டிநடுக்குத்தி நன்னகரும்-காட்டெயினன்
கண்ணைப்பறிகொடுத்தாற் பதியுங்கண்ணன்றன்
பெண்ணைப்பறிகொடுத்த பேரூரு-மண்ணுலகில்
தீண்டாதாயெச்சிலே செழுமறையோர்க்கீந்தாலும்

வேண்டாமெனுநெற்கும் மெய்ப்பொதியு-மாண்டவர்தங்
காதிலுபதேசங் கடவுள்சொல்லும்பதியும்
சிதான்மாயாபுரியுஞ் சேவித்து-நாலுதிக்குஞ்
சங்கமுகங்கங்கேசி தாங்கமுககங்கையுடன்
சங்கமுந்தீர்த்தமெல்லாந் தானுடி-அங்கிருந்து
கங்குல்பகலாக் கடலோட்டக்கப்பலிலோர்
திங்களில்வந்தெய்திடனன் சேறுவின்றி-மங்காத்
தனுக்கொடிதர்ப்ப சயனம்பணிந்து
மனுக்கோடிசூழ்ந்துசெந்தூர் வந்தேன்-கனத்த
திருப்பதிகளொன்பதுநான் சேவித்தங்குள்ள
அருட்பொலியுந்தீர்த்தமெல்லா மாடித-தரும்பொலியும்
குற்றாலநெல்வேலி கோதைவில்லிபுத்தூர்வந்
துற்றேன்றிருச்சுழிகை யூர்பணிந்தேன்-நெற்றிவிழித்
தம்பிரான்பூவணத்தைச் சந்தித்தேன்சங்கேந்தும்
எம்பிரான்சோலைமலைக் கெய்தினேன்-பைம்பொற்
றலையருவியாடியெங்கள் சங்கத்தழகர்
மலரடியைப்போற்றி மகிழ்ந்தேன்-ஸ்தலமகிமை
யானதிருலஞ்சுநா ளங்கிருந்தேனங்கையோர்
ஞானியையன்றனுடனே நட்பானேன்-மேன்மையீர்
சொக்கர்மதுரை தொழுதுவரவேநீரும்
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தே-தக்கோன்
நகைத்தானிவ்வண்ணா நடந்தகதையுண்டு
தொகுத்தமென்றவேதியரே சொல்வேன்-மிகுத்தபுகழ்

ஞானியார்நல்வழியுரைத்தமைகூறல்.

மேவிச்சிறந்தகொந்தி வேந்தனொற்றியூர்த்திருநாள்
சேவிக்கப்போகமனஞ் சிந்தித்தான்-தாவில்
அமைச்சனென்றேசென்றக்கா லங்கொருத்திவல்லி
உமைச்சதிசெய்வாளென் றுரைத்தான்-அமைச்சனுரை
மிஞ்சிநடந்தான் வேசைக்குட்சிக்கினான்
வஞ்சிமருந்தால் மதிகெட்டான்-குஞ்சரமும்
நாடுநகர நவநிதியும்வாங்கினாள்
ஓடுங்குழையுமா வோட்டினாள்-ஆடுகின்ற
கூத்தாடிகள்வான்போற் கோலம்பூண்டாடுவகைப்
பார்த்திரிலேயோசொற் பாவலீர்-வாய்த்த
கரைகண்டார்தென்மதுரை காணவென்றாலாங்கோர்
தொறட்டுண்டதனையான் சொல்வேன்-பொறுத்தகசம்

மதனபிஷேகத்தின் பிரப்புணர்தல்.

அஷ்டதிக்குஞ்சூழ்கோயி லாலவாய்ச்சொக்கருக்குத்
தட்டகெடுக்குந் தழியிலாள்-வட்டமுலை
மாணிக்கமாலையெனு மங்கையொருபெண்ணடிதன்

காணிக்குத்தேடக் கருத்தாகி-வாணைத்
துறைமெழுகியுண்டு தவங்கிடந்துமெத்தக்
குறைகளெனக்குறிகள் கேட்டும்-பெறுவதற்குச்
செப்புதகடெழுதிச் செம்பொற்கழுத்திலிட்டுக்
கொப்பத்துக்காமருந்து கிண்டியுண்டும்-தப்பாத்
திருவனந்தால்சேவித்துஞ் செண்பகப்பூவாசம்
மருவனந்தன்ங்கள் வைத்தும்-திரையுடலை
வேற்றொருவர்கண்டு விரும்பாதநாள்தழை
காற்றடிக்கப்பூத்த கதைபோலச்-சாற்றும்
அரிவைதெரிவைகடந் தப்பானடக்கும்
பருவதத்தேகர்ப்பம் படைத்தாள்-நரைவீழ்
தலையிற்கறுப்பிறங்கிச் சாய்ந்ததெனத்தொங்கு
முலையிற்கறுப்பு முதிரக்-கலக
விழிவேல்குழியமுகம் வெண்மதிமயமாக
எழில்மேனிபச்சைசரம் பெய்தத்-தழைதருங்குல்
கெண்டைவயிறுபெஞ்சைக் கூளேந்த்ரசத்திரத்தில்
உண்டுவருவோர்வயிற்றை யொப்பாகத்-தண்டே ௱௯௬
அளிக்குடித்தாரா ளருகபுளியங்காய்க்கும்
புளிக்குடிக்குமுன்னமிச்சை பூண்டாள்-களிக்கையிற்
றூடுத்தரித்தபிள்ளைக் குள்ளாவார்வாயிலள்ளிப்
போடுவதைதான்வாயிற் போட்டறிந்தாள்-கூடிவந்த
மாதமொருபத்தாய் வயிறுளைந்துபெற்றுளவ்
வேதனையான்மூர்ச்சையாய் மெய்சோர்ந்தாள்-தாதிமார்
பெண்ணென்றூர்காதிற்பிழிந்தமருந்ததுபோல்
துண்ணென்றழுந் துயர்தீர்ந்தாள்-வண்ணமணிப்
பொற்றொடிக்கைமங்கைநல்லாள் பொன்காய்க்கும்பூவொன்று
பெற்றதுபோலீன்றெடுத்த பெண்கொடி-மற்றுள்ளான்

மதனபிஷேகத்தின் வளர்ப்புணர்த்தல்.

எந்தியிருகையா லெடுத்துநறுநீராட்டிப்
பூந்துகிலான்மெய்வட்டப் போட்டினர்-வாய்த்தசங்கிற்
சேனையுடன்வஞ்சத் திருட்டுமெருட்டுமெவ
தானப்புரட்டுந் தனம்பறிக்க-மானிடர்க்குச்
செய்யுங்கபடமகா இக்கிரிப்புமாகாசப்
பொய்யுங்கலந்து புகட்டினர்-செய்யபசுந்
தேனேகனியே தெவிட்டாததெள்ளமுதே
மானேயென்கண்ணே மரகதமே-கானீன்ற
பொன்னேயெனவெடுத்துப் பொற்குரங்கின்மீதேற்றி
மின்னேறிடையாள் விழிபரப்பு-நன்னுதலிற்
பாப்பிட்டசொல்லிவெள்ளி பட்டமெனவெண்ணீற்றுக்
காப்பிட்டாசிற்றடிக்குங் காப்பிட்டால்-கேப்பிட்ட
செய்க்குளைக்கண்மயிலே செம்பொன்னுள்பேர்களையின்

கைக்குள்வளையென்றுவளைக்கைக்கிட்டாள்-சிக்கர்புள
ஒட்டுக்குளாவதுபோ லுள்ளபணக்காரர்களுன்
பொட்டுக்குளாவென்று பொட்டிட்டாள்-பொட்டெனவே
வேந்தர்புதையல் வெளியாக்குமஞ்சனைபோல்
வந்தவடிவேல்விழிக்கு மையிட்டாள்-காந்திமுக
வன்னக்கமலமதில் வண்டிருந்தாற்போலமகள்
கன்னத்தின்மீதோர் கருப்பிட்டாள்-சொன்னதனம்
வீடேறப்பண்டைமுகம் மேலேறத்தன்குடும்பம்
ஈடேறப்பொற்றொட்டி லேற்றினாள்-தேடியுன்பால்
வாராதவாரார் வந்துமடிச்சீலைகொட்டித்
தாராதவாராதந்தனையிற்-சேராதார்
ஆராரார்சேர்ந்துனக்குள் ளாசைகொண்டுசுற்றற்றார்
ஆராராரென்றுதா லாட்டினாள்-தாராட்டிச்
சீராட்டிமுன்னிருத்திச் செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச
ணீராட்டியந்தி நிலாக்காட்டிப்-பாரிற்
கிளைப்பெரியநாகேந்த்ரன் கீர்த்தியைச்சொல்வாணர்
வளர்ப்பதுபோற்பெண்ணை வளர்த்தாள்-முலைக்குமகள்
தள்ளிநடந்தாள் துயர்தீர்ந்தாள்பிள்ளையொரு
சிற்றாடைக்கட்டத் தெருவில்வரக்-கண்டுதட்டி
வம்பிமகண்சுழலை வார்த்தையைக்கேட்டாடவரைத்
தம்பியென்றுசொல்லத் தலைப்பட்டாள்-அம்புபடக்
கைக்குவளையெட்டுக் கடகம்பவளமிட்டு
தக்கையிட்டகாதிற்களப்பமிட்டுப்-பக்கத்திற்
கொண்டையிட்டுக்குப்பியிட்டுக் கொப்பிட்டுக்காலில்வெள்ளித்
தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு-தெண்டரள
மாலையிட்டமட்டையன ஞானமருங்கலிட்டு
வேலையிட்டசுட்டிநெற்றி மேலிட்டுக்-கோல்கசிங்
தாக்கிட்டுச்செம்பவளத் தாழ்வடங்களிட்டுவச்சிர
மூக்குத்தளுக்கிட்டு முத்தமிட்டு-நாக்குளிர
வாரிட்டகொங்கை மதனாபிஷேகமென்று
பேரிட்டுலகரியப் பேசிட்டாள்-ஆரியமும்
கன்னமுங்கட்டி கரும்புபோலேவடுகும்
பண்ணுதமிழும் படிப்பித்தாள்-மன்மதவேள்

பருவக்குறித்தாய் கண்டமையுணர்த்தல்.

இற்பார்தவல்குற்சிறியாள்வயதேழில்
கற்பாதமெல்லாநடித்தறிந்தாள்-உற்பனமாம்
மோனவித்தையுள்ளமுனிவோரையுமயக்குங்
கானவித்தையெல்லாங்கரைகண்டாள்-மேனிக்குள்
வாடைமஞ்சள்பூசவது மல்லிகைப்பூச்சூடுவதும
ஆடவரைவிட்டுக் கழைப்பதுவும்-ஓடிப்
பிழைக்குவதுங்கிட்டநின்று பேசையிலேமுத்தக்

குலுங்குவதுகொஞ்சுவதுங் கொங்கைத்தலைக்-கருப்பை
மூந்திகொண்டுவெட்கம்போன் மூடுவதுகாமுகரை
அந்தமட்டும்வைத்துவிளையாடுவதும்-வந்தவரை
வாள்வீச்சுபோலவரிவிழியால்வெட்டுவதும்
போல்வாய்ச்சிகண்டன்பு பூரித்தா-ளேவலையார்
கைக்குள்வசமாகிவந்து காலைபிடிக்குமந்தச்
சொக்குபொடிமருந்து சொல்லிவிட்டான்-சொக்கர்புது
மண்டபத்தின்முன்னே வசந்தன்சிருநாளில்
எண்டிரையயார்மெச்சவர்க்கேற்றினள்-ஒண்டொடிக்குச்
சின்னச்சிமிழாகிச் செப்பாகித்தேங்காயாய்
வன்னத்தனங்கள் வளர்ந்தேறக்-கன்னிகையாள்
தனையறிந்தாள் தழியிலாள்தன்பழமே
பொன்னையொருபக்கம் புதைத்துவந்தாள்-மன்னவர்கள்
சுற்றுவதுகாமுகரைத் தோயமகளைமனம்
பற்றுவதுங்கண்டறிந்தாள் பப்பரத்தி-பெற்றெடுத்த

தாய்க்கிழவி போதிப்புணர்த்தல்.

மகனேஎன்கண்ணே மயிலேகுயிலே
தேனேமதனுபிஷேகமே-மீனீன்ற
குஞ்சுக்குநீசுங் கொடும்பானபின்குட்டிக்கு
நஞ்சுக்கொடுத்தவரா நகையே-செஞ்சிலைக்கச்
சீவனுடக்கன்றொருபெண் சிங்கம்மாதன்றீனும்
பாவனைபோலேயெழுதிப் பக்கத்தில்-ஓவியமாக்
காரானைபோன்றெழுதிக் காட்டிவரிக்கன்று
போராடிப்பாய்ந்தமதை பொய்யலவே-யாவருக்கும்
காதித்தொழில்தனக்குத் தானேவருமொருவர்
போதிக்கவேண்டுமோ பொற்கொடியே-மாதற்குள்
உன்புத்திஎன்புத்திக் கோவிரட்டியாகிலுமென்
தன்புத்தியுமகளே சற்றேகேள்-ஒண்டதூர்க்
கொஞ்சியரிநுலன் கூளேந்திரன்பன்றிமலை
மஞ்சட்குளியைமறவாதே-மஞ்சண்
மணங்காட்டியாட்பிடிக்கும் வாயைப்பொடியின்
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம்-இணங்கியபொன்
னுத்தரியஞ்சற்றே யொருபாற்றெரியவிட்டு
குத்துமுலைச்செம்பொற் குடங்காட்டி-முத்துநகை
காட்டிவகைகாட்டி கைகாட்டியியைக்காட்டிநாம்
காட்டியிளையோர்க்காசைகாட்டுவாள்-கோட்டுமுலை
சாய்ந்தான்முகந்திறைந்தாற் சல்லிக்கரசென்றமுனக்
ஈந்தாதரிப்பவரா ரேந்திழையே-ஆய்ந்தபஞ்சுப்
பெட்டிபோலேநரைத்த பெண்கள்கையிலென்னவருஞ்
சட்டிசுறண்டவருந் தையலே-கட்டழகன்
வாலிபத்தேதேடின பணம்வைத்தாற்பொற்கட்டால்

வேலைவிட்டுசெட்டலாம் விடெல்லாம்-காலைப்
பிறப்பார்முழுப்பிரட்டும் பேசியிலேறி
படிப்பார்வருவார் படுக்கனிதல்
காட்டுவேலவென்பாரக் கள்ளவண்டர் தங்களையுன்
வீட்டிலழையாதே மெல்லியரே-வீட்டில்வந்து
பாயப்பகட்டுவிதம் பண்ணுவார்க்குப்புழுதி
வாயிற்புகட்டுமெயில்பூட்டு-நீயொருத்தர்க்
காசைவைத்தார்பின்னொருத்த ரண்டாருடனொத்த
வேசையர்க்கெல்லாநகைப்பா மெல்லியரே-காசுபணம்
குப்பல்குப்பலாகக் குவித்தாலும்வாலிபத்தில்
வைப்பிற்றுக்கச்சற்றுமனம் வையாதே-செப்பு
முலையைக்கசக்கிவிட்டு முட்டாள்சரசத்
தலையைவிடுப்பேரை யழையாதே-சிலைநுதலாய்
முன்பினறியார் முடிப்பாகப்பொன்னெழுநூற்
றென்பதுதந்தாலுமனமொவ்வாதே-இன்பமுடன்
கூடுவார்நித்திரைநீ கொள்வதுபார்த்துப்பொடியைப்
போடுவார்சேலைவர்க்கம் பொன்னுடைசை-சோடிணையாச்
சேரச்சுருட்டியப்பாற் செல்வார்விடிந்ததற்பின்
யாரைப்போய்க்கேட்பதுநா மாரணங்கே-ஊரிலே
தந்தைகீழ்ப்பிள்ளையுண்டு தாய்க்கீழ்சிறுவருண்டு
வந்தால்மறைய வரச்சொல்லி-தந்தமதின்
வாயில்வடுச்செய்யாமல் மார்பினகம்வையாமல்
தோயுமிதங்காட்டிச் சுகங்காட்டுஞ்-சேயிழையே
அந்திபடப்பணைய மஸ்தரொக்கமாகவந்தால்
சொந்தமுள்ளபேச்சுமக்குச் சொல்லியே-முந்திவந்து
சாரமுண்டாம்நீயவன்பின் சக்கையைத்தின்பானென்முன்
னேரமழைத்தனுப்பு நேசமாய்த்-தூரத்
திரிந்துவந்துகூடிவிடுந் தேருவார்தம்மேல்
பிரிந்தாசைபோற்பிறகே பற்றிப்-பிரிந்திருக்க
மாட்டேனேயுன்னாலே மாப்பிள்ளைமாராசையெல்லாம்
போட்டேனேயென்னபொடி போட்டாய்நீ-வீட்டில்
தனித்திருக்கப்போடா சாமியுன்றன்பால்
இனித்திருக்குந்தாடா விருடா-சனிக்கிழமைக்
கப்பாலேநீவருவா யாணையிடுமுக்காலம்
தப்பாதேயென்றனுப்பு தார்குழலே-மைப்பொருங்கண்
மாதுநல்லாய்வேறு மருந்தேனவர்திரும்பும்
போதுவருமே புதையெல்லாம்-காதல்கொண்ட
மன்னவரைதாங்குசபா மஞ்சனத்தின்மீதிருத்தி
பொன்னவரைக்கேளாமற்புல்லினால்-மின்னரசே
ஊர்க்குஞ்சனுலைகநம்மோ டொத்தவர்க்குமெண்ணிக்கை
யார்க்குமகனத்தகுடி யாகலாம்-பார்க்குள்ளே

புல்லுவிற்றுங்கீரைவிற்றும் பொன்கொடுப்பார்காணமக்கு
வெல்லிமலைப்பாவாய் குலதெய்வப்-பல்விழுந்த
கூனற்கிழவன் கொடுக்கும்பணமதில்
நானக்குழலே நரையுண்டோ-மானமின்றி
அப்பன்வருவா னதன்பின்மகன்வருவான்
தப்புமுறையென்றுந் தள்ளாதே-இப்புவியில்
மாலக்குளியர்வெகு மாமாயக்கள்ளர் தங்கள்
சோலிக்கும்போகாதே தோகையே-வேலையின்றித்
தந்தையனையாரைத் தழுவிப்பணம்பறிக்கும்
எந்தையுமேத்துவது மெத்துகாண்-சித்ர
கதையைக்கேளென்ப ருக்காலத்திலிந்தப்
பதியிலோர்குச்சிலியப் பையல்-மதுரை
மழுங்குணியென்னும்பேரான் மாதர்தவத்தைத்
தழுவிப்பறிப்பான் தனத்தை-முழுதும்
கிழக்குதெருவினெட்டைக் கிஷ்ணுசிவீட்டைக்
குளப்பரியர்த்தப்பாரித்தான்கூடி-முளைத்தெழுந்த
செப்புமுலைமாதே சிவிலிபுத்தூர்தாசிக்
கிப்புடமையெல்லாங்கொள்ளை கொண்டான்-வைப்பென்று
தந்திரமாகப்பசித் தஞ்சாவூர்செல்விதனைக்
கந்தைபொருந்தவிட்டான் கைம்மருந்தால்-இந்தவகை
ஆங்கவனுக்கேகொடுத்தா ரல்லாததன்பொருளை
வாங்கினபேரில்லை யென்மேலாகி-ஈங்குவந்தான்
குன்றுமுலையாய் கொழுத்தகுட்டியகப்பட்ட
தென்றுபூரித்தே னிருதோளும்-அன்றுமுதல்
மாட்டிற்பரங்கிக்காய் மாதேதினங்கறியாக்
கூட்டிக்கொண்டாலங்கவனை கூட்டியே-வீட்டில்வந்த
நாலாநாளல்லி னடுச்சாமஞ்சோதித்துக்
காலிற்றோடுசெருப்புங் கட்டியே-மேலெல்லாம்
வெண்ணீறுபூசியைந்து வீரசடைபின்னிட்டுப்
பெண்ணிலியென்றுகண்டபடார் பின்வாங்க-யெண்ணமின்றி
கள்ளுஞ்சோருங்கைச்சுரிகையுமாய்போய்க்கழுவிற்
கள்ளன்வந்துகுதிக்கா னரம்பில்-மெள்ள
விளக்கெரிந்துநெய்வடித்து வீட்டில்வந்துநன்றாய்
உழக்கரிசிபெய் தூரவைத்துப்-புளிப்பில்லாச்
சாற்றிடும்பாற்குழம்பிற் சற்கரையுங்கூட்டியிட்டுன்

சோற்றிலிட்டென்னைச் சுழலவிட்டு-வேற்றுவனு
பாயத்தாற்றேடும் பணப்புற்றிலேகரடி
வாயைவைத்தாற்போலுறிஞ்சி வாங்கிவிட்டேன்-பேய்போல
கையிலுள்ளதெல்லாம்போய்க் கப்பறையொன்றேந்தியதோ
தெய்வமேயென்று திரிகிறான்-நொய்யரிசி
நாளுக்குநாள்செல்வர் ணங்காயுனக்குவரும்
ஆளுக்கிருக்குதென்ன மாழாக்கு-வாள்விழியாம்
வேடிக்கையாய்மாசி வீதியிலேநாமுலவ
ஆடிக்குமுன்னேயென் ஞசையெனத்-தேடுநிதி
யுள்ளவரைமெள்ளவுபாயமாய்க்கூட்டிப்போய்
கொள்ளுபவளமுத்து கோவைவடம்-உள்ள
கடையுஞ்சவுளிக் கடையும்பார்த்தையா
கிடையாச்சரக்கு கிடைத்த-தடைவாயேன்
ஊத்தண்டமாலைபக்கா தோலையைப்பொன்மோதிரத்தை
வைத்ததென்றுலுங்கடுக வாங்கித்தா-பத்தஞ்சு
வட்டிச்சுமந்தாலுமப்பால் வாங்கலாமென்பாங்
கொட்டனுக்குநெஞ்சுருக் கென்னும்-பொட்டெனத்தான்
கைத்தனத்தையீவான் கடையுள்ளசரக்
கத்தனையும்வாங்கி யறையிலிட்டு-வைத்து
மருந்திடுப்பிற்கட்டி வருவார்சிலர்மேல்
இருந்தும்பைவாட்டி யெடுப்பார்-பரிந்தணைந்து
கைச்சரம்போற்றரவிக் கண்டுபிடித்துடனே
பிச்சப்பிடிங்கியெறி பெண்ணணங்கே-லச்சையுற
மன்மதநூலேபடித்த வம்பாளன்ஞணையுன்றன்
சென்மசென்மமுள்ளமட்டுஞ் சேராதே-சன்யாச
ருத்திராட்சரபூனே ரூபகிலருண்டுவந்தால்
மெத்தையிலேவைத்து விளக்கணைத்துச்-சத்தமின்றி
கூடையிலேவைத்து கூப்பிட்டாளையர்தம்மைக்
கூடையிலேமூடிவைத்து கூப்பிடுநீ-பாடிக்
கடுக்கண்லேக்குங் கவிப்புலவர்வந்தால்
துடுக்காயொருவார்த்தை சொல்வாய்-கொடுக்கவென்றால்
ஐந்துபொன்வாங்கா ரரைப்பணமேபோதுமென்பார்
சிந்தையருமகிழச் செப்பிட்டா-லந்தம்
இசைபாடுவார்கூடா தென்றூற்கொடிய
வசைபாடுவார்கெடுமே வாழ்வீர்-அறையவுளம்

அஞ்சுகின்றகச்சேரி யாட்சேவகர்வந்தால்
வஞ்சியவரீந்ததைநீ வாங்கிக்கொள்-கொஞ்சமென
எண்ணுமேதகைமுதல்மற் றென்னபேர்மோர்சொம்பு
தண்ணீர்போம்நாமிடுப்பொய்ச் சத்தியம்போம்பெண்ணணங்கே
வாவென்றழைப்பார் மணியம்பிளுக்கர்கம்மா
போவென்றுசொன்னாலும் பொலலரப்-பாவையே
தாசனையாச்சேலையிலே தம்பலத்தின்சாருமிழ்ந்து
சூதகமானேனென்று தூரவிரு-மாதவிடா
யானநாளிற்பனைய மருக்கரொக்கங்காணிலொரு
பானைவென்னீர்க்காகவெண்ணிப் பாராதே-நானுன்மேல்
மோகமுற்றேனீயென்மேல் மோகமில்லையென்றுசிலர்
தோகைநல்லாயுன்கருத்தைச் சோதிப்பார்-ஓகோநீர்
என்னமாச்சொல்லவந்தீ ரென்னுசையும்மேலென்
றன்னமேயென்றலைதொட் டாணையொடு-சொன்னவர்தப்
பொய்யாணையால்சீவன் போகுதோபாரெனக்குத்
தையலவ்வாணை தயிர்ச்சாதம்-கையில்
இருட்டினிற்செல்லாப்பணத்தை யீந்துபடுத்துக்
கருக்கலிலேபோவாரைக் காட்டித்-தரச்சொல்லி
வாய்மட்டாப்பேசினல் மானேமுதலின்மேல்
நாயைவிட்டாற்போலெழும்பி நம்மைவிடு-கோயிலுக்குள்
தம்பியாரையனுட னுண்டுதம்பியார்
தம்பியாரைக்கூடிச் சஞ்சரிநீ-அம்பெனுங்கண்
மைவிஸ்தாரக்குயிலே வாய்விஸ்தாரக்காரன்
கைவிஸ்தாரக்காரன் கையைவிடு-செய்யமறைக் ௨௱
கட்டளையார்வந்தாலுன் கைம்மருந்தாலேயறிவைத்
தட்டழியப்பண்ணித் தமையறிநீ-அட்டிலிலே
சோறுசமைக்கும் சுயம்பாகிவந்தாக்கால்
வேறுமொருவேளான்மை வேண்டுமோ-காறும்
பருப்படியுச்சம்பரவும் பாற்குழம்புநெய்யும்
வரும்படிந்தகட்டளையாய் மானே-தரும்பொருளை
வெம்மளிக்கைபண்ணுதே வெஞ்சினப்பண்டாரிவந்தார்
லும்பளிக்கையூர்வரததை யொக்குமோ-சம்பளத்தைக்
கூட்டிச்சுமத்திவைப்பான் கோயிற்கணக்கனொரு
வேட்டுப்போட்டுப்போ வீட்டிலழை-ஆட்டுவிக்க
கால்பிடித்தநட்டுவனார் கையைப்பிடித்தழைத்தால்
வேல்படைத்தகண்மயிலே மேவிவிடு-சாலநெடு
நேரஞ்செல்லாம நெடுங்குடைக்காரனைமுன்
நேரமழைத்தனுப்பு நேசமாய்ச்-சாரமுள்ள

நாடகத்துப்பார்த்து நமக்குநடவிக்கும்
பாடகனையுங் கனத்து பண்ணிக்கொள்-கூடுசத்திக்
காரனையுங் கைத்தானக் காரனையுமெக்காளக்
காரனையுங்கூடியிதங் கட்டாதே-தூறு
தலையராய்க்கைத்தாழைத் தம்பியராற்பிறம்
கலையராயுன்னழகைக் கண்டுவிலைகொடுத்தால்
வாங்குவாய்சற்றே மருவுவான்போய்ப்படுப்பான்
தூங்குவான்போவான் சுகமறியான்-பூங்குயிலே
மஞ்சத்திரீயுமொருப் பிள்ளையுமாயிருந்து
மிஞ்சிச்சாத்திலொரு வேற்றுள்வந்-தஞ்சாறு
தந்தாலவனைச் சமையல்வீட்டிற்பதுக்கிச்
செந்தேனை மெல்லச் செறுமிவனை-வந்தணைந்து
கொல்லைக்குப்போன குணம்போற்கைகாலலம்பி
மெல்லப்போநம்மையவர் வெல்லுவார்-நல்ல
உடந்தையாவைத்திருந்த வுத்தியோகஸ்தர்க்
கிடைஞ்சல்வந்தாலு மனையும்வந் தேய்ப்பார்-மடந்தையே
காணிக்கையானேனுன் கண்டியைத்தா தண்டையைத்தா
மாணிக்கமாலையைத்தா வைத்துரான்-காணிக்கை
தீர்ந்தமொருமாதந் திருப்பித்தருவனென்பார்
வந்திழையேநீசற் றிணங்காதே-காந்தாரி
வாய்க்குட்பயந்தவர்பின் வாய்ப்பேசார்நோக்கமாய்
என்னைக்கலந்தவர்களென்றுலுங்-கைநிறையப்
பொன்னைக்கொடுத்தாற்புணர்ந்துவிடுமுன்னே
பறவைமிருகங்கண்முறைபார்க்குதோ-வேசி
முறைபார்க்கவேபிழைப்புமோசஞ்சிறுபோதே
தேடியல்லோவன்பிற் சிலம்பியென்றுமன்னவரைக்
கூடுதிருவாரூர் கெண்டியென்றும்-ஆடவரைத்
தட்டும்பெருங்குண்டைத் திம்மியென்றுங்கொண்டையிற்பூ
மட்டுண்டவொற்றியூர்வல்லியென்றும்-சிட்டர்தொழும்
பூவணமாம்பொன்னகரிப்பொன்னையாளென்றிமுடந்
பூவணமாந்தென்னுறையூர்ப்பொன்னியென்றுதேவர்தொழும்
சொக்கேசர்கோயிற் றுணைக்கொடியென்றும்புவிக்குள்
மிக்கானபேர்படைத்தார் மெல்லியரே-அக்காலம்
வண்ணமா றப்பசுப்பொன் வாங்கவொருத்திசெய்த
தின்னமா றுறக்கதையைக் கேட்டிலையோ-பெண்ணணங்கே
என்றிப்படித்தா யியம்பினன்புத்தியதை
பன்றிப்படித்தா ளனேகபுத்தி-அன்றுமுதல்

மதனபிஷேகத்தின்செய்திகூறல்.

காதமதமீறிவருங் காமுகராம்யானைகளைக்
கோதிமுகிராங்குசத்தார் குத்தியிதழ்-ஓதிபந்த
மாரணரண்மனைக்குள் வைத்தணைத்துச்சேர்ந்துரச
சாரக்கரும்புதனை யூட்டி-மூரலவாய்த்
தம்பற்கவளந் தனைகொடுத்துகம்பமுலைக்
கம்பத்துடன்பிடித்து கட்டினாள்-அம்பரத்தீ
மூட்டுவிக்கும்யோகமுனிவோரையும்பொ[illegible]மல்
ஆட்டுவிக்குந்தோணுநப்போ லாக்கினாள்-தீட்டியவேல்
வண்ணக்குடையரசர் மாணிதியாமுந்நீரை
உண்ணக்குறுமுனியை யொப்பானாள்-பெண்ணுக்குத்

அவளது தோழிகளைக்கூறல்.

தோழிமார்கைமருந்துச் சொக்கியென்னுஞ்சாராயத்
தாழியென்றுந்தாது சவுந்தியென்றும்-எழுமதி
லேறியென்றுந்தஞ்சாவூரெத்தியென்றுமாயக்
கறியென்றுங்குண்டுணிவாய்க் கள்ளியென்றும்-பாராட்டக்
குள்ளியென்றுமாயக் குருவியென்றுமாரீசக்
கள்ளியென்றும்பந்துபோகாமுகரை-மெள்ளப்
பொருத்துதவாருடலாய்ப் போவாரையோடிநீ
திருத்துவார்தாராரைச்சிம்பித-துரந்துவார்
கல்லிலேநாருரித்துக் கண்பார்நனைத்துவிடங்
கல்லுவார்தாமுமொரு கைப்பார்-மெல்விரல்லார்

அவனைவிரும்பிய ஆடவர்செய்திகூறல்

இவ்வாறுசெய்ய விருநிதியந்தேடுமந்த
மைவார்விழியாண் மதிநுகற்கும்-செவ்விமிக
கெடியிடைக்குநிலவெறிக்க குறுநகைக்குமொயில்விளைந்த
பிடிடைக்கும்வயிரமிட்ட ப்ரபைமிகுந்த-கொடிகளுக்கும்
அலையுதித்தவமுதெனச்சொ லருமொழிக்குடிருவிழிக்கும்
மலைகளொக்குமலைகளுக்கு மனதுவைத்து-வலையினுக்குள்
மான்சிக்கினாற்போல் மருளவருந்தூண்டிலில்
மீன்சிக்கினாற்போல் மெலிவாரும்-என்சிக்கிக்
கொண்டோமென்றுள்ளங்கொதிப்பாருங்கூடியின்பங்
கண்டோமென்றுள்ளங் களிப்பாருங்கண்டணைய
பேச்சுமடந்தைக்கு பிடிக்குமதாசையென்று
பூச்சுமருந்திட்டணையப் போவாச்ச-தென்றே
யார்க்கும்பொடிபோடுமாயிழைமூவாடமணம்
சொக்குபொடிபூசிச் செல்வாரும்-ஊர்க்கிணக்கச்
சந்தனத்தைருநது சரிந்தனக்காரிபண்ணுந்
தந்தனத்துக்குள்ளாய் தளர்வாரும்-தந்திரமாய்

மாதைப்பசப்பவென்று வாசல்மட்டும்வந்தாரைப்
பூதமதைக்கண்டதப்போவாரும்-கோதாயுன்
கால்பிடிக்கவோவட்டிலை கட்டவோசண்பகப்பூ
மேல்பிடிக்கவோவிசிறி வீசவோ-கோலமலர்
கட்டவோகட்டழகி கண்ணுறங்கப்பொற்றூங்கி
தட்டவோவென்னருகிற் சார்வாரும்-வெட்டிவேர்
மண்டுகுழலாள்குளித்த வாடைமஞ்சணீரையள்ளிக்
கொண்டுதலைமேற்றெளித்துக் கொள்வாரும்-அண்டர்பிரான்
சன்னிதியிற்சந்தடியிற் றள்ளுண்டுவீழ்வார்போற்
பின்னுகுழலாளைப் பிடிப்பாரும்-பின்னொருத்தன்
வீட்டிலிருக்க வெளியிலேநின்றுகண்ணை
காட்டித்திரிந்து கரைவாரும்-வீட்டிறப்பை
அண்டக்கலவிசெய்யு மாரம்பங்கேட்டுவெட்டித்
துண்டித்தாற்போலத் துடிப்பாரும்-கண்டனையாள்
சோதிமுகமஞ்சள் துவண்டதுகிற்போர்வையுடன்
வீதிதொறும்போய்ப்பிலிக்கி மீழ்வாரும்-காதளவு
மைப்பட்டகண்ணிசப்ர மஞ்சத்தின்மேற்காலைத்
துப்பட்டிக்கொண்டுதுடைப்பாரும்-செப்பமுள்ள
தெப்பத்திருநாளிற் றெப்பக்குளத்துமங்கை
தெப்பத்தேயேறிவருஞ் சீட்டில்-அப்பம்
வடைசுகியன்றோசைவகைகள் பணியாரம்
கடையிலேகொண்டுமடி கட்டுச்-சடுதியிற்போய்
நாரிகையிலேகொடுக்க நாடிவடமோடுமோழ்
வாரியிலோடி வருவாரும்-பேராம்
வசந்தன்றிருநாளில் மண்டபத்தின்மங்கை
இசைந்துநடம்புரியு மெல்லை-கசங்காமல்
மல்லிகைபூச்செண்டு மருக்கொண்டுசந்தடியை
மெல்லவிலக்கிவரும் வேளையிலே-நல்லபடைக்
கம்பாலடிப்பட்ட தஸ்தியினொந்துடம்பு
செம்பாலெழுகத் திரிவாரும்-தம்பிரான்
பல்லக்குக்கூடி பதினறுநாழிகைமேல்
வெல்லவர்க்குங்கொங்கை வளவுக்குச்-செல்லுகையிற்
குக்கல்வாய்க்காட்டிற் கொடுத்தத்தலைவாரி
கைக்குள்ளகப்பட்டுக்கட்டுண்டு-சக்கிரத்தம்
மூக்கிட்டொழுக மூழங்கையிடிபட்டுநெஞ்சிற்
சீக்கட்டிக்கொண்டு திரிவாரும்-தூக்குமஞ்சத்
தேயொருவன்வீட்டி லிருக்குமதுகாணுமற்
போயொருவன்வீட்டி புகுதவே-நியாயமற்ற

பூசல்விளைத்துப் பொருமையினாலேவந்து
பேசிவெளியிற் புறப்பட்டு-ரோசமுடன்
மாதொருத்திக்காய்ப்பொருத வாலியுஞ்சுக்ரீவனும்போல்
வீதியிலேமற்கட்டிவீழ்வாரும்-சாதிரைத்தீ
வட்டிவெளிச்சமினுமினெனவந்தியர்முன்
கட்டியங்கள்கூறக்கடுநடையாத்-தொட்டிவரும்
பாதக்குறட்டிற் பவழக்குமிழிலங்க
மாதுமணவரைக்குள் மன்னர்வரும்-போதிலந்த
வீட்டிற்பரணேறி மேவுந்தொழிலாளி
கேட்டுப்பதுங்கிக் கிடப்பாரும்-பாட்டிளஞ்சொன்
மாங்குயிலைப்போல மருவக்கனவுகண்டு
தூங்கையிலேயிந்திரியஞ் சோர்வாரும்-சங்கிவனுக்
கியும்வகைகாணு மிரசம்பொன்னைக்குவது
பாயுமென்றுமிரசம் பலகூட்டித்-தீயிற்
குகையிலேவைத்துக் குளித்தூதிவாகப்
புகையிலடிப்பட்டுப் புகைந்து-திசைதெரியா
மாலைக்கண்ணுகி மதிமயங்கித்தங்கள்தங்கள்
காலைக்கண்ணுங்கிவிழி கண்பாரும்-வாலிபத்தில்
பூணுர்முலையாட்காப் பொன்திருடிக்கையிரண்டும்
காணமற்கண்டு தளர்வாரும்-வாணுதற்காத்
தாங்கன்னமிட்டுத் தலையைக்கடைக்காசு
வாங்கன்னவிட்டுலை மாய்ப்பாரும்-தூங்கிவிழும்
வண்ணுனரைமயிரும் மாதவிடாய்த்தம்பலமும்
பெண்ணுப்த்தலையோடும் பின்னையொன்றும்-சுண்ணும்பும்
பானைபோலேநரைத்த பாவிபடுகைத்தலத்திற்
பூனைபோற்றேண்டிப் புதைப்பாரும்-மானனையாள்
இட்டமருந்தா லிருமல்பிடித்தோயாமற்
குட்டியிட்டநாய்போற் குறைப்பாரும்-ஒட்டியபுண்
என்பவர்க்குநாணி யிரசந்திரன்றில்கரும்பு
தின்பவர்க்குநாணித்திரிவாரும்-பொன்சரிகைச்
சேலைகொடுத்ததற்குச் சிமோட்டியேன்கொடுத்தால்
சூலைகொடுத்தானென்று சொல்வாரும்-மூலவரை
யாப்புக்குச்சத்திரமிட்டாவிக்காக்கரகமாய்த்
தோப்பிற்கிடந்து துடிப்பாரும்-மாப்பிளைமார்
வைத்தநகக்குறியை மங்கையிருகொங்கையிற்கண்
டெய்த்துநெடுமூச்செறிவாரும்-முத்துமுத்தாய்
பேசினலும்போதும் பேதைநமைத்தூஷணமா
யேசினலும்போது மென்பாரும்-பாசிழையாள்

கொந்தலரும்பூவணைமேற் கும்பகர்ணனிலைசெய
இந்திரன்போற்பக்கத்திருப்பாரும்-ஐந்துபத்து
மாடுவிற்றோமாற மறிவிற்றோமேழுமனை
ஆம்விற்றோம்வீட்டி லடிமைவிற்றோம்-தேடரிய
வெண்கலத்தாற்குத்து விளக்குவித்தோங்காணிவிற்றோம்
உண்கலத்தைவிற்றோ முடைமைவிற்றோம்-பெண்செல்வக்
கென்னத்தைக்கேழ்க்கவந்தா லென்னத்தைநாங்கொடுப்போம்
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும்-முன்னமிந்த
மின்னாசைகொள்ளாமல் வீணுக்குக்கொண்டேமிக்
கன்னாசமென்றுதளர்வாரும்-என்னசெய்வோம்
பங்கைவிற்றுமீந்தோம் பண்டுநாந்தாருமென்றாள்
எங்கே சுமையெடுப்போ மென்பாருங்-கங்குலுக்கு
தித்திலோனுகாசுசெல்லோனுபோனகுலுநாம்
இதகணையுந்தோற்றிழந்தோமென்பாரும்-அத்தையர்
சூளைமகளுநற் சொர்ணமெல்லாங்கைக்கொண்டு
நாளையென்றென்றுமனை நைவாரும்-நாளிமேசர்
பாண்டிநாட்டிச்சி பணமுறுஞ்சினாள்நாங்கள்
ஆண்டிபானோமென் றலைவாரும்-ஆண்டியர்தம்
கொண்டுபோய்வேட்டிபோய்த் தோகைக்குடையவளைக்
கொண்டுபோய்க்கையிற் கொடுப்பாரும்-சண்டசெட்டு
மோசமாச்சுக்காண் முகனுக்குப்பல்லாண்டைக்
காசுமில்லையென்று கரைவாரும்-பேசியவட்
கிந்தபொருளைவட்டிக் கீந்தோமேநாமிருக்க
வாய்ந்தமச்சுவீடுகட்டி வைத்தோமே-கூந்தலிளம்
பேடையயிலபோலவிட்டுப் பெண்டாட்டிக்கேயுடமை
சோடினைபாப்பூட்டிச்சுகித்தேமோ-ஆடுகொண்டு
விட்டோமோமாடுகொண்டு விட்டோமோதெய்வத்துக்
கிட்டோமோதேகியென் பார்க்கிந்தோமோ-அஷ்டதிக்கும
நாடிப்புகழ்பெரிய நாகன்மேற்பாயாலே
ஆடித்திபாகம் சொரிந்தோமோ-தேடுநிதி
தன்னைகொடுத்து தரித்திரத்தைவாங்கினோம்
என்னவியாபாரமென்பாரும்-இன்னவகை
காமுகரெல்லாமயங்கக் காளத்தியையன்மகன்
ஆமொருவனிவ்வூர னுகியையன்-நேம
மதுரைக்கொருநாள்போய் மாசித்தெருவில்
விதிவசத்தாற்கண்டானப்பின்னை-மதிநுதலாள்
மையலுக்குள்வீழ்ந்தான் வடுச்செய்யாமரத்தில்
மெய்யுரிஞ்சப்பொய்க்கவரி வீழ்ந்தாற்போற்-கையில்
இருந்ததெல்லாம்வீட்டி லிருந்ததெல்லாமாஸ்தி
இருந்ததெல்லாந்தோற்று னிறந்தான்-மருந்தினைற்

கன்ருண்டார்போலக் கலங்கினன்வாசலிலே
தள்ளுண்டான் றன்னொழுக்கந் தப்பினன்-விள்ளுவதேன்
ஆதியையனென்னும்பே ரன்றேபோமிப்பால்வி
யாதியையனெனும்பே ராயினு-னன்பாதி
யுடலாகியொட்டியபுண் ணுள்ளுருமார்க்கும்
தொடலாகச்சிச்சுரங்கு ருலே-கொடிய
அரையாப்புமேகவெட்டை யண்டத்துவாதம்
புரையாய்ப்பவுத்ரம் புகைச்சல்-இருமல்
இளையாப்பொடுகுமருந் திட்டநோய்ப்பித்தம்
களைப்புமாய்ப்போன்பூணே போற்கத்திக்-கிழக்கே
அடுத்தமனையி லருகுதிண்ணைகன்னிப்
படுத்துக்கிடக்கிருள் பாரும்-படித்தவரே
இப்படியாய்த்தேடியுண்ணு மேந்திழையாள்வாழ்மதுரைக்
கெப்படியோவீர்வருவ தெப்படிகாண்-செப்புமவர்
தானியையரேயென்று தக்கபுத்திபோதிக்க
ஞானியையனைப்பார்த்து நான்விர்த்தியானேன் உ௯0

அவதானி மதுரைக்கேகினமைகூறல்.

இருப்புத்தூணிற்கரையா னேறுமோபோம்போம்
நெருப்பிற்புழுபோமோ நீரென்-கருத்தை
அறியீரொன்றேநல்ல தையலரேயென்று
பிரியாமல்வந்தாரென் பின்னே-நெறியினிற்போய்
வையகமேலெய்தியசீர் வைதிகனூமெய்யொளிசேர்
மெய்திரைநீர்வையையில்லான் மூழ்கியே-உய்யப்
படியுகடியவாகொடிய படிசெயுமிடர்முழுதும்
அமருமெழுகடலினிடை யாருக்-கிடைபோய்
பரத்துக்கேவிருப்புற்ருேர் பவதுக்கோர்நெருப்பாப்பாம்
அருட்பொற்ருமரைக்குப்போ யாடி-உருச்செபிகரும்
ஐந்தெழுத்தைச்சிந்தைவைத் திட்டபேருக்குச்சஞ்சலத்தை
சிந்துசிந்திக்குஞ்சரத்தைத் தெண்டனிட்டுக்-கந்தபுஷ்பக்
கற்பகமெனப்பொலி கடம்பநிழலிற்குலவும்
அற்புதகயற்கணுமை,யைநதெழுக்து-சிற்பரத்தில்
நேசர்மனவாசர்பவ ராசர்கயிலாசர்சக
நேசர்மதுதேசரடி யான்போற்றி-தேசமுடன்
துங்கப்ரகாரத்தை சுற்றிவடகுபாச்
சங்கப்புலவர் தகையேத்தி-எங்குமுள்ள
தீயமாபாதகமுந் தீர்த்தம்பருகி
நாயகர்பொற்கோபுரத்தை நாடீங்கி-ஆயிரக்கால்

மதனபிஷேகத்தைக்கண்டு மருண்டமைகூறல்.

மண்டபத்திற்கண்டேன் மதனபிஷேகத்தை
விண்டலத்தைவிட்டுவந்த மேனகையைக்-கொண்டச்
சொருக்கழகுமூக்குத் துருவழகுஞ்செவ்வாய்
முருக்கழகுஞ்சேனை முசப்பிற்-கருக்கழகும்
வேலழகுமென்ற விழியழகுந்தண்டையிட்ட
காலழகும்பொற்கடகக் கையழகும்-ஓலையிட்ட
காதழகும்வச்ரமணிக் கச்சிறுக்குமார்பழகும்
சோதிமுகத்தழகுந் துங்கரத்ன-மாதுரதி
கட்டழகும்பொட்டழகுங் கச்சைகட்டுவந்தகட்டு
மட்டழகுங்கண்டு மயங்கினேன்-கிட்டவந்த
நாட்டத்தைக்கண்டு நடந்துதிரைமனுப்பூத்
தோட்டத்தைக்கொள்ளைகொண்டு தோன்றினன்-வாட்டுமதன்
கையம்பு பாயவஞ்சி கண்ணம்புபாயுநின்று
தொய்யுமான்போலத் துவக்குண்டேன்-தெய்வகதி
காணுமிசைராகங் கைத்தாளந்தத்தளங்கை
வீணைபலன்சித்தி வேணுசுரம்-கோணமல்
கூடுஞ்சுருதியுடன் கொம்பனையாள்சங்கீதம்
பாடுஞ்சுருதியின்பம் பாலிக்க-ஆடவரை
எய்யுமதவேங்கைக் கிளையுமலரீதல்போல்
தையலாள்புட்பஞ் சலிசெய்தாள்-செய்துபிள்ளை சாம
யார்கவந்துவங்கொண்டா ளாயுலிணைமாயி
னார்கவந்துளங்கொண்ட நண்ணினேன்-சேரும்
நிலைக்கிடைகொண்டால்சுருட்டி நீலமலர்ச்செங்கண்
வலைக்கிடைகொண்டாளென் மனதைக்-கலைப்பாத
முந்தோரெடுப்பெடுத்தாள் மூரிவில்லைப்பூட்டிஎன்மேல்
வந்தேரெடுப்பெடுத்த மன்மதவேள்-நந்திசொன்ன
சொற்கட்டிலாரி தொடுத்தாள்முன்னின்றவரை
மற்கட்டுவாள்போல மறையநின்றேன்-பொற்கடக்க
கைச்சாயங்கொண்டாள் கனப்பேசலாமிதற்கே
மெச்சாலமென்றுரைத்தார் விஞ்சையோர்-மெச்சுந்
தருக்கொண்டான்மற்றோர் சதிகொண்டாள்கண்டே
மருட்கொண்டிருக்கவெனை வைத்தாள்-விரித்தசுருள்
பாதிமடிந்தாள்கீதம் பாடினாள்பூப்போடு
வாதிநடுத்தாளி தயங்கினார்-சூதுமுலை
மாதுபிரபந்தம் வலுத்தாளிதற்குரைப்ப
தேதுபிரபந்தமென வெண்ணினேன்-காடிப்
பதசாரிசாரிகொள்ள பார்வேந்தரீந்தார்
முதுசாலிரைப்பொன் முடிப்பை-சதிராக

நின்றவினையங்கள்செய்தாய் நிஷ்டூரியென்மனது
கன்றவினையங்கள்செய்தாள் கண்ணாலே-மன்றிலொரு ௪௨௦
கோப்பெடுத்தாள்வேந்தர்பொன்னை கொள்ளைகொள்ளக்கள்ளியிந்த
கோப்பெடுத்தாளென்றுரென் கூடவந்தோர்-காப்பான
தாரணிகொண்டாள்வோர் தடமகுடங்கற்பிக்கப்
பேரணிகொண்டாளப் பேய்கொண்டேன்-ஆரணங்கு
சக்கணிநின்றாடச் சபையிலேபோட்டியந்த
மைக்கணியைமுத்தாட வாஞ்சித்தேன்-மைவாளும்
செயுலாகுவித்தையினாள் செம்பொனுடனேமெனவென்
கைலாகிளெந்தக் கழுந்தானேன்-மைவாளும்
கைவாளுமென்னைவெட்டக் கள்ளியொருகூத்துவிதம்
செய்தாளம்மான்வலையிற் சிக்கினேன்-தொய்யாமல்
தேசிகத்திலோர்நடனஞ் செய்தாள்சபையிலுள்ள
கோசிகைப்பொன்னுடையெல்லாங் கொள்ளைகொண்டாள்-பேசும்
நயமங்களப்பெண்டை ணம்பலசெய்தாள்
செயமங்களம்பாடித் தீர்த்தாள்-மயல்கொண்ட
பேதையென்றன்மனதும் பெண்களும்பின்னேதொடர
மாதுமனைக்கேக வழிகொண்டாள்-காதில்விசைப்
பந்தடிபோற்றுள்ளிப் பரதவித்தேன்பாங்கனையச்
சந்தடியைக்கைவிட்டுத் தப்பினேன்-மந்த்ரசெப
சுற்றனெனுந்தனையுந் தோழனெனும்பாகனையும்
புத்தியெனுமங்குசமும் போக்கியே-மத்தமிஞ்சப்
பெண்ணானைத்தொடரும்போரனையேபோலப்
பண்ணார்மொழியாள்பின்பற்றினேன்-வண்ணமலர்க்
காலிலிட்டதண்டை கலின்கலியென்றேலமிட
மேலிலிட்டபூஷணப்பொன் மின்னெறிப்ப-வாலிபர்கண்
டண்ணாந்தகொங்கைக் கறிவைக்கொடித்திலையிற்
சுண்ணம்பிடாமற் சுருட்டியுண்ணக்-கண்ணிரண்டும்
மங்கைமேலாக வருவாரும்போவாரும்
தங்களிலேதங்கள் தலைமோத-துங்கமற
அத்தியின்மேற்செல்லு மரசரிவள்கொங்கைகளும்
மத்தகமுநோக்கி மதிமருளத்-தத்துபரி
கான்மீறினாற்போற் கவினநெகிழவிட்டு
மான்மீறினாரெதிரே மாறிவிட-வேல்விழியாள்
சந்தனகும்ப ஸ்தனங்கள்சுமந்திட்டவிடை
நைந்தனமென்றுநடுங்க நடந்திடுவள்-வந்துதன
பொன்முகப்புமாளிகையிற் போய்ப்புகுந்தனின்றேநான்
மூன்முகப்புவாயிலிலோர் மூங்கைபோல்-என்முனொரு

செக்குவருவதுபோல் மோட்டி கைமருந்துச்
சொக்கிறெனும்பாங்கிவந்து தோன்றினள்-மைக்குழலாள்

பாங்கிகள் சந்திசெய்தமைகூறல்.

ஆரென்றாளுங்களூர் யாதென்றாளே தங்கள்
பேரென்றாளண்டியண்டிப் பேச்சிட்டாள்-காரிகையே ௨௪
சீரங்கமெங்கள்பதி சிங்கையரெந்தசப்பன்
சாரங்கபாணியையர் தப்பினன்-நாரணையர்
சுப்பையரெனமாமனர் சோமாசிபட்டர்பெறும்
அப்பையங்காரெங்கள் தம்பி யாருமே-செப்புகவி
அஷ்டாவதானியென்பே ராரிழையென்மனைவி
மட்டார்குழலி கணவெறுப்பால்-விட்டேகி
நாடிவந்தேனுனைகள்பதி நம்பர்சொக்கலிங்கர்முன்னின்
றாடிவந்தபெண்ணரசி யாரென்றேன்-ஆடவரே
மாணிக்கமாலைபெற்ற வச்சிரத்தைக்கும்பகுடக்
காணிக்குவாய்த்த கனதனத்தை-ஆணிமுத்தை
விண்ணிச்சைகொள்ளவந்த மேனகையைப்பெண்ணுக்குப்
பெண்ணிச்சைகொள்ளவந்த பெண்ணமுதை-எண்ணரிய
சாஸ்திரவிதக்கோக சாரத்தைமேல்விருது
பாத்திரசிரோமணியைப் பைங்கிளியை-வாய்த்தமட
மானைமரகதத்தை மன்மதகுடோரியைச்செந்
தேனைமதனாபி வேஷகத்தை-நானிலத்தோர்
எல்லாமறிந்திருக்க யாமறியோமென்றவிதம்
சொல்லீரென்றாள்மயிலைத் தாண்டினள்-மெல்லிநல்லாய்
இன்றைக்கெவர்வருவா ரேந்திழைக்கென்றேனந்தக்
குன்றைபொருமுலைக் கொப்பனையாள்-மெல்லிநல்லாய்
பட்டணத்தூப்பாரபத்யம் பாஸ்கரையனேகோட்டைக்
கட்டளையாருபாடக் கட்டுபல-பட்டடையிற்
சோலையப்பிள்ளையோ சுற்றுதடைகட்டு
மாலையப்பிள்ளையோ வாசல்வழிச்-சாலையஞ்சற்
காரமணியன் கனகசபாபதியோ
பாரணிலாயர்மணியம் பார்க்காறோ-சீரணவு
ஆரமணிய மாசப்பனோதர்ம
தானமணியஞ் சதாசிவனோ-மேன்மைதரும்
கோயிற்றுறைமணியன் கும்பலிங்கப்பிள்ளையோ
ஆ[illegible]ந்துறைமணிய மாண்டிபே-ஒய்வருகா
[illegible]டமணிய முருகப்பனோனைத்
தோட்டமணிய னெட்டைச் சொக்கனோ-மாட்டிவரி
காரனோபாசிவரிக் காரனோபிரங்கிக்
காரனோபொற்சொடிமேற் காதலொடும்-ஓரிரவிக்

எத்தனையோபேரிங்கே யெத்தனையோபொன்கொடுவங்
தெத்தனையோசொல்வார்க ளெத்தூக்கள்-உத்தமிதான்
அங்கவரிலேயொருவர்க் காணுலும்வாய்நேராள்
இங்கஞ்சிறுதேரை தின்னுமோ-உங்களைப்போல்
நற்குணமுள்ளார்தமையே நாடுவாள்வேந்தர்தரும்
பொற்குவைக்குமுள்ளம் பொருந்தாள்காண்-சொற்புலமை
வீறுடையராகியநல் வேதியரேயென் றுசில
கூறியதன்பின்னேயக் கோதையங்கே-ஒருதலைத்
தூதுசவுந்தரிக்குச் சொன்னாள்பயிலாக
ஏதுக்குழைத்தி ரெனவந்தான்-மாதுக்கின்
னார்வருவார்சொல்லென்றே னாருமில்லைப்பொன்கொடுத்து
நீர்வருவீராகிலிங்கே நிற்பானேன்-வாருமென்றாள்
முத்தனையமுத்துநகை மோகவல்லிக்குப்பயணம்
எத்தனைபொன்சொல்லென் றியம்பினேன்-அத்தைக்கு
மூந்நூறுபொன்மகட்கு முந்நூறுபொன்னெனக்குப்
பின்னூறுபொன்றோழிப் பெண்களுக்குச்-சொன்ன
தொறுநூறுபொன்னு மொருமுடிப்பாய்த்தந்து
வருவீரேல்வாருமென்றாள் மங்கை-துரைமதுரை
வெள்ளைப்புதுவெட்டு மின்னலாயப்படியே
அள்ளிக்கொடுத்தங் கனுப்பினேன்-உள்ளிருந்து

ஏவற்பெண்க ளுபசரித்தமைகூறல்.

ஐபந்தாரணிகூந்தற் பைங்கனிவாய்ப்பெண்கள்சிலர்
வந்தார்தொழுதார் வரச்சொன்னார்-சந்தனத்தி
கைவிளக்குக்கொண்டுவந்தாள் கால்விளக்கநல்லதண்ணீர்
தெய்விகொண்டுவந்தாள்பொற் சொம்பிலே-மைவிழியாள்
அங்கிபிடித்தா ளடங்கப்பலவரிசைசின்னத்
தங்கிபிடித்தாள் தனிப்படிக்கம்-செங்கலவை
பூசினாள்பூசிவந்து பூமுடித்தாள்பூவுமல்ல
வீசினாள்பொன்கவரி வெண்கவரி-ராசி
கைலாகுகந்தாளென் காணேதுமென்று
வெயிலாள்பாவாடை விரித்தாள்-ஒயிலாகப்

மனைக்குடசென் றிருந்தமைகூறல்.

பம்புபெருபோனுட் பகட்டறியாப்பாய்புலிபோல்
அம்பலனுமனைக்குள்யான்சென்றேன்-செம்பவளப்
போதிகைக்காலேந் துசிங்கப் பொங்கத்தங்கச்சுவுக்கை
மீதூரத்நகம்பளி விசாலத்தில-மேதுகரிக்
கோட்டாரக்கொங்கையார் கொண்டுவந்து திண்டருகு
போட்டார்துரைப்பங்கு போலிருந்தேன-வாட்டங்கண்

மதனாபிஷேகங்கண்டு ப்ரசரித்தமைகூறல்.

வட்டமிட்டகொங்கை மதனாபிஷேகமுநான்
கிட்டிவிட்டபொன்முடிப்பைக்-கைக்கொண்டு
தருக்குடையேன்றன்னை வந்தசந்திக்கொண்டு
பருக்குமெலுமிச்சம்பழங்கள்-மருக்கொழுந்துச்
செண்டுகொண்டுதன்னிடத்திற் சென்றிருந்தவென்மனதாங்
கொண்டுவந்துநின்று கும்பிட்டாள்-ஒண்டொடியாள்
காதலரைச்சேர்ந்தறியாக் கன்னிபோல்சூதறியாப்
பேதைபோற்கூசிமெள்ளப் பேசினாள்-மாதவரே
மண்டபத்திலாடினேன் வந்துநின்றீருமைநான்
கண்டுமயலாகியென் பக்கத்துள்ளோர் ஒண்டொடியை
மெள்ளப்போய்கூட்டிவா வீட்டிலென்றேன்மாரீகக்
கள்ளிகுழப்பிக் கழப்பிட்டாள்-தெள்ளுதமிழ்ப்
பாட்டிலேவல்லீரென் பங்கிற்குலதெய்வம்
வீட்டிலும்மைக்கூட்டிவந்து விட்டதே-வீட்டில்வரத்
தாங்களேன்வாறற் றலைக்கடையினிற்பானேன்
பாங்கியேன்வந்தாற் பயணமேன்-நீங்களல்ல
பூவைகண்டேமுடித்துப் போவோமென்றெண்ணிநீர்
மேவிக்கொண்டானுன் விடமாட்டேன்-தேவரீர்
சித்தமெங்கள்பாக்கியமென்று செப்பினாள்சாலவித்தை
யத்தனையுமெய்யென்றே யானிருந்தேன்-கைத்தலத்தால்
மின்னிருக்குநுண்ணிடையாள் மெனகமலக்கைபிடித்து
முன்னிருத்திக்கொண்டு முகம்பார்த்தேன்-கின்னரத்தைக்
கூட்டினாளேந்துமுலைக் கோட்டினாள்தந்திரியை
மீட்டினாள்சங்கீத வெல்லச்சாறூட்டினாள்
சொக்கேசர்பேற்கவியஞ் சொக்கேசர்தம்பாதி
மிக்கானவங்கயற்கண் மேற்கவியும்-தக்கபுகழ்ப்
பாண்டித்துரைமீதிற் பாட்டும்படித்ததற்பின்
ஆண்டகிலேகோட்டை யதிபன்மேல்-தாண்டுபுகழ்ச்
சிங்காசனாதிபதி சிந்தமகூளேந்த்ரனருள்
எங்கோன்பெரியநா கேந்த்ரன்மேல்-தங்கை

பதம்படித்தாள்வண்ணம் படித்தாளென்காதுக்
கிதம்படைக்குந்தேன்போ லினிக்க-விதம்படைக்கும்

முற்கட்டும்பாகமுஞ்சீர் மோனைகளும்பொருளும்
பிற்கட்டுமுன்முரணும் பின்முரணும்-நற்கட்டாம்

சொற்கட்டுங்கண்டுவிலை தொண்ணூறுபொன்பெறுமோர்
கற்கட்டுமோதிரத்தைக் கையிலிட்டேன்-விற்பிடித்த

தாய்க்கிழவிகண்டு உபசரித்தமை கூறல்.

வாங்கினாற்போல வளைந்தவறட்டுடனும்
வாங்கிவைத்தகாலுந் தடிக்கொம்பும்-தேங்காய்
குடுக்கைபோல்வாயுங் கொடுவாயுஞ்சற்றே
நடுக்குந்தலையு நரையும்-பொடிகக்கொகவு
மொய்த்தகண்ணுக்காற்றுமுட்டிமுன்பறியப்பின்பறியக்
குத்திருமல்போட்டலைக்குங் கோப்புமாய்-வித்துக்கு
விட்டசுரைக்காய்போல் விழுந்தமுழங்காலதனைத்
தொட்டமுலைத்தாய்க்கிழவி தோன்றினாள்-கிட்டவர
நாணமுற்றாள்மாமியென்று நானறியத்தன்னுடம்புக்
கோணலுக்கேசற்றே கோணினாள் தூணைதுங்கி
வந்தீராவெங்கவரி வாசைத்துரையேநீர்
சந்தோஷமாகவிங்கே தான்வரவே-இந்தமனை
என்னதவஞ்செய்ததோ வென்பேதைமுன்பிறப்பில்
என்னதவஞ்செய் திருந்தாளோ-கன்னிமுகதா ருா
நாளிரவுகண்டகனா நன்மையுமென்பேதைமணிக்
தோளிடதுபக்கந்துடித்ததுவும்-ஆள்வருத்தில்
காகங்கதறியதங் கட்டைச்சிதுப்பியதுந்
தோகைக்கொருகுறத்தி சொன்னதுவும்-போகம்வரப்
பல்லிநிமித்தம் பலகாலியம்பியதும்
நல்லவரைச்சேர்க்குமென்றுநங்கையுடன்-சொல்லிவைத்தேன்
அப்படிவந்தீரென் னாசைமகள்குணத்தை
இப்படியென்றேயறியீ ரின்னமுநீர்-பொய்ப்பிரட்டுச்
சாலவித்தைபெண்கள்தடத்தின்மீதத்தறியாள்
மாலைவித்தைபெண்கள் மனைக்கேதான்-நாலு
பரத்தையரைப்போலே பணங்காசுதேடுங்
கருத்துண்டோகாயக்கங்காணேன்-ஒருத்தர்கிட்டி
மானுளைவிட்டேனோ மாயுக்கிசந்திவந்து
தானலொருகாசுக் காகுமோ-நாநீன்ற
மாதுக்குராச வளர்ச்சியேயல்லாமல்
ஏதுமறியாள்சிறியா ளின்னற்காண்-பேதைக்குக்
கொஞ்சவயதானாலுங் கூடியுடைக்கவந்து
கொஞ்சவயதுகாண் கொற்றவரே-வஞ்சிநல்லாள்
தன்மனதுக்கேற்கச் சவரித்தார்பொனகோர
மன்மதன்வந்தாலுமினி வாங்காள்காண்-என்மகட்குப் ௩ாய
பாலிலேமெல்லப் பழநழுவிவீழ்ந்தவிதம்
போலவந்துவாய்த்தீரப் புலவரே-நீவியொரு

பேய்ப்பிள்ளையைப்பெற்றேன் பிடிப்புவிடாமற்கொண்டு
மாப்பிள்ளையும்பெண்ணுமாய்வாழ்ந்திருங்கள்-மாப்பிள்ளைக்கு
நித்திரைமெத்த நெடுநேரமாகுதுபோ
தந்தைமொழியாயென்றுதன்னைசொல்லி-அத்தையரும்
போயினார்பாங்கியரும் போயினார்செம்பவள
வாயினாள்வீட்டில் வாருமென்றாள்-சேயிழையாள்

பள்ளியறைச்சிறப்புகூறல்.

முன்சென்றாள்பின்சென்று முன்முகப்புவாசலிலோர்
பொன்கொண்டிழைத்தரத்நப் போதிகையோ-மின்கொண்ட
சித்ரக்கொடுங்கையோ செம்பொனிலையோசதவிற்
பத்திவிட்டதோர்கண்ணாடிப் படமோ-கத்திரிப்பு
வேலைநிறைத்தபுது மேற்கட்டியோசிறந்த
காலைநிறைந்த வரிசையோ-கோலவச்ரக்
காலிட்டதூக்குமஞ்ச காந்தியோபட்டாடை
மேலிட்டமல்லிகைப்பூ மெத்தையோ-எல்லைகண்டு
தாங்கியதீவட்டிக்குத் தானேதயிலம்விடப்
பாங்கில்வைத்தகுத்திரப்பொற் பாவையோ-தூங்குமஞ்சப்
பக்கத்தில்வெள்ளிப் படிகமோபள்ளியறைத்
திக்குக்குத்திக்குமதிற் சித்திரத்தில்-மைக்கருங்கட்
பெண்ணிரதிபோலாறு பேர்க்கொருவனேவிலை
பண்ணவெழுதிவைத்த பாவனையோ-தண்ணளியோன்
மேற்கொண்டொருமடந்தை மிக்காமுபரிசெயக்
கார்க்கொண்டைபின்சரியக்காலெழுப்பிப்-போர்கலவி
யாட்டத்திற்குதகமு மாகவெழுதிற்கமுவிற்
போட்டவிதமேபாலிருந்த பொங்கமோ-வாட்டமுற
மோடிவைத்தபெண்கமல முன்கைபிடிந்துக்கடைக்கண்
நாடிவைத்தாளென்று நயம்பேசச்-சூடகக்கை
தன்னைக்குவித்துத் தலையன்றலையிலத்த
மின்னனையாள்தானஞ்செய் விந்தையோ-பின்னொருபால்
அம்பனையகண்ணியுமோ மாறுந்தலைமாறிச்
சம்பனங்கள்செய்யுந் தொழிலவிதமோ-சம்ரமங்கள்

தாய்க்கிழவிவரவிட்ட வரிசைகூறல்.

சொல்லமுடியாது தூங்குமஞ்சத்தேறினேன்
மெல்லவிழுங்கொர்ப்பத்தில் வேழம்போல்-நல்லதங்கத்
தட்டிலேபாக்குவெள்ளித் தட்டிலேவெள்ளிலைப்போற்
பெட்டியிலேமல்லிகைப்பூச் சிப்பு-வெட்டியே
தாநச்சிமிழிற் சவாதுகுர்றுபட்டைதனிற்
கெந்தபொடிபவளக் கிண்ணத்திற்-சந்தனங்கள்

கூறுங்கிளிமொழியைக் கூடிவிடாயாறித்
தேறும்பொழுதிலுண்ணச் சிற்றுண்டி-வேறுசில
பீங்கானிற்பன்னீர் பிடிசெம்பிலேவெந்நீர்
தேங்காய்முலையார் சிலபேர்கொண்-டாங்குவந்து
மாமிவரவிட்ட வரிசையென் றுவைத்துநின்றார்
காமியவர்களைக்கண் காட்டினாள்-சேமமணி

படுக்கைசேர்த்தமைகூறல்.

வாசற்கதவடைத்தாள் மங்கைநல்லாள்போனதற்பின
பேசிக்குணுளமிட்டு பேதைபோற்-கூசி
மதிவதனங்காட்டி வளைத்திருத்திநின்றாள்
புதியமணவரைப்பெண் போல-மதனாபி
ஷேகமேயென்பிராண ஸ்நேகியேதாங்காதென்
மோகமேயென்றவளை முத்தி-பிடித்தேக
சயனித்திருத்திமுகத் தன்னின்முகஞ்சேர்த்து
சயனத்தில்வைத்தே நயனம்-பாவுமரப்
பேசிமலர்மல்லிகைவேர் பிச்சைமுடித்துக்கலவை
பூசிச்சவ்வாது புனுகணிந்து-தேசம்
பிடித்துக்கொடுத்தாள் பிளவுதாம்பூலம்
மடித்துக்கொடுத்தாள்தன் வாயாற்-கடித்துக்
கொடுத்தாள்சிலசுருளைக் கொஞ்சிமடிமீதிற்
படுத்தாள்புளகம் படைத்தேன்-எடுத்தணைத்து

அனுபோகவகை கூறல்.

கொங்கைமுகம்பிடித்துக கொங்கைவாய்த்தேன்குடித்து
செங்கைகொடுநெகிழ்த்தேன் சேலைதனை-அங்கவளென்
சோமனுரிந்தாள் துடைமேற்றுடைபோட்டாள்
காமமொழுகவிட்டாள் காமியத்தைக்-காமக்
கலைமுறையேயாலிங் கனங்களைந்துசெய்தோர்
முலைசுவைத்துமற்றோர் முலையை-மெல்நெருடிக்
கைம்முலமுண்டு கவுண்மாங்கனிசுவைத்து
மைவிழியிணைவைத்து வாங்கிநகம்-பையத்
தலையழுத்தியுந்தி தனின்மகரங்கூறிக்
கலவைகழுத்தணைத்துக் கட்டநிலைமைபெறச்
சாதிகுணங்குறிகள் தத்துவங்கள்தேர்ந்துசுக
மாதுபருவ வகைகண்டு-சோதித்
தறிந்துபதினைந் தமிர்தநிலையாராய்ந்
திறங்குமிடமேறுமிடங் கண்டறிந்து-விஷ
ஸ்தானமகத்தியுள்ள தாவிவருடிபின்பு
மானவிரச்சுவைத்துள்ளத் தாங்கள்-தேனின்றன்

மெல்லமெல்லவீவி விரல்கொண்டுசேற்றியந்த
வல்லிமேலென்சண் வரிசிலையிற் சொல்லும்
அகாரஉகார ஏகாரஐகார
இக ரக்கணைகளைவந் தெய்துமகாரசகளீர்
பாய்ந்தொழுகச்சேர்ந்தணையிற் பஞ்சகாணத்தின்மே
லாய்ந்தகரணமுத லாங்கரணம்-மாய்ந்தமகிழ்
அந்தகரண மவட்குமெனக்குமொன்றாய்
முந்தக்கலவிப்போர் முன்னே-சந்தனப்பொற்
குங்குமகும்ப குடங்களைவென்றத
னங்கள்புயங்கள் ததும்பிநெருங்கிட
மங்கைகுசங்கென மருங்குநெருங்கவே
னங்கைநகங்க ளழுந்த-மயங்கி
அணைந்துகுதைந்துமே யன்றியிரண்டு
பிணைந்தவிதங்கள் பிணைந்து-மணங்கமழ்
ஆகமுமாகமு மாவியுமாவியும்
மோகமுமோகமு மூரலும்-ஆகவோர்
எட்டெட்டையிரட்டிசெய்ததொகை
ரட்டிசெய்திட்டவகைத்தொழில்-இஷ்டமுடன்
கண்ணாடியில்ரதியுங் காமனுங்கற்கின்றதெனக்
கண்ணாடியிலொருபாற் காண்பிக்க-பெண்ணரசி
தண்டாளப்பூண்மார்பு தாங்கியுயாதியில்
மண்டலமபோமுன்னிருத்திவார்குழன்மேல்-வண்டெழுந்து
சங்கீதம்பாட ஸ்தனங்கள்தாளம்போடச்
செங்கனிவாய்மென்குதலைத் தீங்குழல்போற்-பொங்குமுற
மங்கைநலாளாயிரக்கால் மண்டபத்திலாடினள்போல்
இங்கொருமன்மதக்கூத் தாடினாள்-எங்கும்
கற்றகழைகூற்றுக் காட்டிவலசாரி
சுற்றியிடசாரி சுற்றினாள்-மற்றுமந்தப்
பைந்தொடிக்கைத்தாடனம் பளீல்பளீலென்றுவிழக்
சந்தமலர்க்கைவளை கலீலெனக்கந்தரத்தில்
ஒன்றுகுகுவென வொன்றுகுமுகுமென
ஒன்றுகுங்குங்கென்ன வோரைதரக்-குன்றாத
புள்ளொலியெட்டுங்குமுறப் போதாகுறைக்குவித்தைக்
கள்ளிநொடிப்பின்வகை நொடித்தாள்-கைமெள்ளமக
பீடத்தில்வைத்தேன் பெருங்காமவாரிதியில்
